# Student Media Release Consent Form

**Form 529B6**
Revised Jun 15, 2010

Translations in Tamil

Toronto District School Board

**படிவம் 529B**
மீளாய்வு
ஜூன் 15, 2010

# மாணவர் ஊடக விடுவிப்பு இணக்கப் படிவம்

***தயவுசெய்து பகுதி 1 இல் ஒரு பெட்டியிலும் பகுதி 2 இல் ஒரு பெட்டியிலும் குறியீடு இடப்படுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.***

## பகுதி 1– நிகழ்வுகள்

_______________________________ ஆகிய நான் இதன் மூலம் ரொறொன்ரோ பிரதேச

*(மாணவர் வயது வராதவராக 18 வயதிலும் குறைவானவராயின் பெற்றோர்/பாதுகாவலர் பெயர்.*
*18 வயது அல்லது அதனிலும் கூடிய வயது வந்த மாணவராயின் மாணவர் பெயர்.)*

பாடசாலைச் சபை (TDSB) அத்துடன்/அல்லது அவர்களின் பங்காளர்கள் ஆகியோருக்கு பின்வருவனவற்றைச் செய்வதற்கு அனுமதி வழங்குகிறேன்: எனது / எனது பிள்ளையின் பெயர், உருவம், மாணவர் வேலை மற்றும் மேடை நிகழ்ச்சி (இவை யாவும் ஒன்றுசேர இதன் பின்னால் "செயல்வடிவங்கள்" என்று அழைக்கப்படுவன) போன்றவற்றைப் பதிவு செய்தல், திரைப்படமாக எடுத்தல், படம் பிடித்தல், ஒலியிழை நாடாவில் அல்லது ஒளியிழை நாடாவில் பதிந்து கொள்ளுதல் என்பவற்றுடன் இச் செயல்வடிவங்களை ரொறொன்ரோ பிரதேசப் பாடசாலை சபை தீர்மானிப்பதற்கு ஏற்ப பிரசுரித்தல், TDSB பாடசாலைச் சபையின் இணையத் தளம் மற்றும் பாடசாலைகள், சமூக ஊடகத் தளங்கள் ஆகியவற்றில் பார்வைக்காக இடுதல் அத்துடன் / அல்லது தொலைக் காட்சி அல்லது வானொலியில் ஒளி மற்றும் ஒலி பரப்பும் தேவைகளுக்காக பார்வைக்கு வைத்தல், பிரசுரித்தல் அல்லது விநியோகம் செய்தல் ஆகியன.

இன்று அல்லது எதிர்காலத்தில் இவ்வாறான செயல்வடிவங்களை மற்றவர்கள் பயன்படுத்த முன்பு நான் அனுமதிக்க வேண்டிய எனது உரிமையை இத்தால் நான் கைவிட உடன்படுகிறேன். அவ்வாறு பயன்படுத்துவது பற்றி நான் அறிந்து இருப்பினும் அல்லது அறியாது நடந்து இருப்பினும் இது பொருந்தும். செயல்வடிவங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இருக்கக் கூடிய உபயோக உரிமைக் கட்டணங்களைப் பெறும் எனது உரிமையையும் நான் கைவிட உடன்படுகிறேன்.

இச் செயல்வடிங்கள் இலத்திரனியல் வடிவத்தில் இணையத்தில் அல்லது TDSB கல்விச் சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்தில் உள்ள வேறு பிரசுர வெளியீடுகளில் தோன்றக் கூடும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். அங்கீகாரம் பெறப்படாமல் அவை வெளியிடப்படுவதன் விளைவாக எழக் கூடிய தீங்கு எதற்கும் TDSB கல்விச் சபையே பொறுப்பு என்று நான் கருதமாட்டேன் எனவும் நான் உடன்படுகிறேன்.

☐ மேலே விபரிக்கப்பட்டவாறு பதிவு செய்யப்படும் TDSB சபை /பாடசாலை நிகழ்வுகள் மற்றும் TDSB சபை ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் உங்கள் பிள்ளை பங்கு பற்றலாம் என்பதற்கு நீங்கள் **இணங்கிக் கொண்டால்** தயவுசெய்து இந்தப் பெட்டியில் குறியீடு இடுங்கள். (கீழே பகுதி 2 பார்க்கவும்)

☐ பதிவு செய்யப்படும் TDSB சபை / பாடசாலை நிகழ்வுகள் மற்றும் TDSB சபை ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் உங்கள் பிள்ளை பங்கு பற்றுவதை நீங்கள் **விரும்பவில்லை என்றால்** தயவுசெய்து இந்தப் பெட்டியில் குறியீடு இடுங்கள்.

## பகுதி 2 – குறிப்பாக ஊடகங்கள் பற்றியது

பாடசாலை நிகழ்வுகளில் வெளிப்புற ஊடக அமைப்புகளும் வந்து பங்குபற்றும் என்பதை நான் அறிவேன். இவ்வாறான நிகழ்வுகளில் எனது / எனது பிள்ளையின் பெயர், உருவம், மாணவர் வேலை மற்றும் மேடை நிகழ்ச்சி போன்றவை படம் பிடிக்கப்படுதல், திரைப்படமாக எடுக்கப்படுதல், ஒலியிழை மற்றும் ஒளியிழை நாடாக்களில் பதியப்பட்டு பிரசுரிக்கப்படுதல் அத்துடன் /அல்லது உடன்நிகழ் முறையில் தொலைக்காட்சி அல்லது வானொலியில் பரப்பப்படுதல் ஆகியவற்றுக்கு நான் அனுமதி வழங்குகிறேன்.

☐ ரோறொன்ரோ பிரதேச பாடசாலைச் சபைக்கு வெளியேயான நிறுவனங்களால் பிரசுரிக்கப்படும் அல்லது ஒலி மற்றும் ஒளி பரப்பப்படும் ஊடக நிகழ்வுகளில் உங்கள் பிள்ளை பங்குபற்றலாம் என்பதற்கு நீங்கள் **இணங்கிக் கொண்டால்** தயவுசெய்து இந்தப் பெட்டியில் குறியீடு இடுங்கள்.

☐ ஊடக நிகழ்வுகளில் உங்கள் பிள்ளை படம் பிடிக்கப்படுவதை, திரைப்படமாக எடுக்கப்படுவதை, ஒலியிழை அல்லது ஒளியிழை நாடாக்களில் பதியப்படுவதை நீங்கள் **விரும்பவில்லை என்றால்** தயவுசெய்து இந்தப் பெட்டியில் குறியீடு இடுங்கள்.

இம் மானவர் ஊடக விடுவிப்பு இனக்கப் படிவத்தை நான் வாசித்து இருப்பதுடன் இந்த விடுவிப்பின் உள்ளடக்கத்தையும் அர்த்தத்தையும் பூரணமாகப் புரிந்துகொண்டு இருக்கிறேன். இந்த விடுவிப்பு சம்பந்தமாக ஏதாவது கேள்விகள் இருந்தால் அவை பற்றிப் பாடசாலை அதிபருடன் தடையின்றி நான் தொடர்பு கொள்ள முடியும் என்பதையும் அறிவேன்.

மாணவரின் பெயர்: _______________________________ தரம்: __________

பாடசாலை: _______________________________

மாணவரின் கையொப்பம் (வயதில் 18 ஆனவர் அல்லது அதனிலும் கூடியவர் என்றால்) _______________

பெற்றோர்/பாதுகாவலரின் பெயர்: _______________________________

பெற்றோர் / பாதுகாவலரின் கையொப்பம்
(மானவர் வயதுக்கு வராதவர் – வயது 18 உக்குக் கீழாக உள்ளவர் என்றால்): _______________

திகதி: _______________